In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 143/2015 |
| PW: | 7 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 17-04-2026 நாள்: வெள்ளி |
| பெயர்: | ஸ்ரீகுமார் |
| த/பெ: | கோபாலகிருஷ்ணன் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.04.2026**
(Accused A1 and A2 present ).

**சாட்சி நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1) காயம்பட்ட நபர் என்னிடம் சிகிச்சைக்காக வந்த போது தன்னை யார் யார் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். தெரிந்த 3 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார்.

2) தெரிந்த 3 நபர்கள் தன்னை கம்பு மற்றும் கைகளால் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். காயம்பட்ட நபரை பரிசோதனை செய்த போது அவருக்கு உடம்பில் 3 வெளிக் காயங்கள் தான் இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3) மேற்படி காயங்களில் உதட்டின் கீழ்புறத்தில் ஒரு வீக்க காயம் இருப்பதாக குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் முதலுதவி சிகிச்சைக்கு பிறகு தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்து கொள்வதாக கூறி சென்றுவிட்டார் என்றால் சரிதான்.

4) காயம்பட்ட நபர் கோவில்பட்டி ஆர்த்தி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் இருந்து சிகிச்சை விபரங்கள் வந்ததா என்றால் வந்தது.

5) காயம்பட்ட நபருக்கு கீழ் உதட்டின் கீழ்பகுதியில் உள்பக்கமாக உள்ள எலும்பில் காயம் ஏதும் இருந்ததா என்றால் இல்லை. வலது ஆர்பிட்டலில் உள்ள வெளிப்புறம் உள்ள பகுதியில் காயம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

6) காயம்பட்ட நபருக்கு வலது கண் பகுதியில் காயங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் இல்லை. ஆர்த்தி மருத்துவமனையில் எடுக்கப்பட்ட ஸ்கேன் ரிப்போர்ட்–களை என்னிடம் காட்டினார்களா என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

7) வலது கண்ணிற்கு கீழ் உள்ள எலும்பு மெல்லிய எலும்பு என்றால் கடினமான எலும்பு. கடினமான எலும்பில் மிக அதிகமான வேகம் மற்றும் அழுத்தத்தில் அடித்தாலோ, விழுந்தாலோ தான் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். எலும்பிற்கு அருகில் உள்ள நரம்புகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. நரம்புகளில் பாதிப்பு இருந்ததாக ஆர்த்தி மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட அறிக்கையில் இல்லை என்றால் சரிதான்.

8) காயம்பட்ட நபருக்கு ஆர்த்தி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை ஏதும் மேற்கொள்ளப் பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2 ம் தேதி என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபர் 3ம் தேதி தான் ஆர்த்தி மருத்துவமனையில் சேர்ந்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி

மருத்துவமனையில் அவர் 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான்.

9) பொதுவாக எலும்பு முறிவு காயங்கள் சரியாவதற்கு குறைந்தது 3 வாரங்கள் ஆகும் என்றால் சரிதான். ஆர்த்தி மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை விபரங்கள் ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே ஆகியவற்றை பார்க்காமல் கருத்துரை வழங்கப்பட்டது நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் மேற்படி மருத்துவமனையில் சிறப்பு நிபுணர் வழங்கிய சான்றிதழின் அடிப்படையில் தான் எனது கருத்துரையை வழங்கியுள்ளேன்

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.